நேசக்கரம்

# நேசக்கரம்

அக்டோபர் - டிசம்பர் 2005 நேசக்கரம் சிறார் பகிர்வு மடல் இதழ் - 39

எங்களாலும் முடியும்...

## மகளிர் நடத்தும் அன்னபூர்ணா பல்பொருள் அங்காடி

கடந்த மார்ச் மாதம் பத்து நாட்கள் மகளிர் சுய உதவிகுழுக்களுக்கான தொழில் முனைவோர் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் 30 மகளிர் கலந்து கொண்டனர். பயிற்சி நடைபெற்று கொண்டிருக்கும் போது தொழில் தொடங்க தேவையான வழிமுறைகள் கற்றுக் கொடுக்கப்பட்டன. ஒரு புதிய கண்ணோட்டத்தோடு ஊக்குவிப்பு கொடுக்கப்பட்டது.

பயிற்சிக்கு வந்திருந்தவர்கள் பொருளாதார மேம்பாடு அடைய சிலர் தனி தொழிலாகவும், குழுவாகவும், கூட்டுத் தொழிலாகவும் செய்து வருகின்றனர்.

ஏற்கனவே இப்பயிற்சி எடுப்பதற்கு முன்னரே மகளிர்களுக்கு சிறு சிறு தொழில்கள் செய்து வந்த அனுபவம் இருந்தது. அதோடு பயிற்சியில் கிடைத்த தகவல்கள், அனுபவங்கள் மேலும் தன்னம்பிக்கையையும் ஊக்கத்தையும் ஏற்படுத்தியதன் விளைவாக பயிற்சி, எடுத்தவர்களில் 20 பேர் கொண்ட "வைகறை" மகளிர் சுயஉதவி குழுவாக சேர்ந்து ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு முன் வந்தனர். ஒரு பல்பொருள் மளிகை கடை வைத்து நடத்த வேண்டும் என்ற எண்ணம் மனதில் வந்தது. அதற்கான முயற்சியில் இறங்கினார்கள், தேர்ந்தெடுத்துள்ள தொழிலை பற்றி பல்வேறு விவரங்களை சேகரித்தனர். வாடிக்கையாளர், இடம் அதற்கு தேவையான பொருளாதாரம் போன்றவற்றை கணக்கிட்டனர். இவர்களின் ஆர்வத்தையும், கடின உழைப்பையும் கூட்டு முயற்சியையும் கண்ட நேசக்கரம் இயக்குநர், மற்றும் மகளிர் திட்ட அலுவலரின் முயற்சியினால் இந்தியன் வங்கி இவர்களுக்கு வங்கி கடன் அளிக்க முன் வந்தது. அதன் பேரில் ரூ 10 லட்சமாக வங்கி கடனோடு தலா நபருக்கு ரூ. ஐயாயிரம் முதலீடு செய்தனர். தேனாம்பேட்டையில் 1100 ச.அடியில் என்.7, போயஸ் சாலையில் 21.10.2005, அன்று மகளிர் அன்னபூர்ண மளிகை பல்பொருள் அங்காடி உதயமானது.

இவர்கள் எடுத்த முயற்சிக்கு வெற்றி கிடைத்துள்ளது என்பதை இக்குழுவில் உள்ளவர்கள் தன்னம்பிக்கையுடன் பெருமிதத்துடன் கூறுகின்றனர். இவர்களின் வெற்றிக்கு பின்னால் நேசக்கரம் இருந்துள்ளது என்பதை நினைத்தால் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. பெண்களாலும் எதையும் சாதிக்க முடியும் என்று நிரூபித்துள்ளனர்.

## நேசநீரால் மீண்டும் மலர்ந்த வாடிய பூ...

ரேவதி என்னும் பதினான்கு வயதை உடைய பென், குழந்தை கூலி வேலை செய்யும் தந்தையுடனும், வீட்டு வேலை செய்யும் தாயுடனும் திருவல்லிக்கேணி பகுதியில் நடைபாதையை வீடாக்கி வசித்து வருகிறாள். தன் படிப்பை நான்காம் வகுப்புடன் நிறுத்திய ரேவதி, கடந்த மூன்று வருடங்களாக உடன்பிறப்புகளான தன் தம்பியையும் தங்கையும் கவனித்து வந்தார். இவ்வாறு மலர்ந்து கனி கொடுக்க கூடிய இவளின் வாழ்க்கை, சிறுவயதிலியே பூவாகியது. இது மட்டுமல்ல!

தம்பியும் தங்கையும் உறங்கிய பிறகு, விளையாடச் செல்லும் இவள், தனக்கு தெரிந்த நபர்களால் 'போதை மருந்து' வாங்கி வர அனுப்பப் பட்டாள். அவர்கள் அந்த போதை மருந்தை தன் கண்ணெதிரே நுகர்வதையும் கண்டாள். கூடிய சீக்கரத்தில் தன் தோழியுடன் இணைந்து இவளும் 'நுகரும் போதை மருந்துக்கு' தன்னை அடிமையாக்கினாள். பூ வாடியது முழுமையாக. மதியமும் இரவும் என ஒரு நாளில் இருமுறை இந்த போதை மருந்தை நுகர்ந்தாள் ரேவதி. கடந்த ஒன்றரை வருடங்களாக தோழியுடன் போதை மருந்தை பயன்படுத்திய இவள், 6 மாத காலமாக தனியாகவே இப்போதை மருந்தை நுகர்ந்தாள். தானாகவே கடைக்குச் சென்று இம்மருந்தை பெற்று, தன்னையே சிறிது சிறிதாக அழித்துக் கொண்டிருந்தாள். பூவாக மணம் வீச வேண்டிய இவள் போதைக்கு அடிமையாகி புண்ணாகி போனாள். நேசக்கரம் இப்பகுதியிலும் பணி செய்து வருவதால் அமைப்பாளர் திருமிகு முருகேசன் அவர்களால் இவள் அடையாளம் காணப்பட்டாள். தனது சொந்த முயற்சியாலும், கவனத்தாலும், ஆர்வத்தாலும், ரேவதி மாலைவகுப்பிற்கு முருகேசன் அவர்களால் கொண்டு வரப்பட்டாள், வாழ்வில் ஒரு திருப்பு முனையை கண்டாள்.

ஆற்றுப்படுத்துதல் மூலமாக அவளுடன் கலந்துரையாடிய முருகேசன், ரேவதியின் நம்பிக்கையை பெறுமளவிற்கு ஓர் உறவை ஏற்படுத்தி அவளை சிறிது சிறிதாக போதை பழக்கத்திலிருந்து மீட்டார். பலநாள் முயற்சி மற்றும் கவனிப்பிற்கு பிறகு, போதை பழக்கத்தை முழுவதுமாக மறந்தாள் ரேவதி. வாடிய பூவாகிருந்த ரேவதி நேசக்கரம் நீந்தி நேசநீரால் மலரத் தொடங்கினாள் மீண்டும். தற்பொழுது தையல் கற்றுதரும் ரேவதி, மாலை வகுப்பிற்கும் வந்து செல்கிறாள். ரேவதியின் வாழ்க்கையில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை கண்டு பெற்றோரும் மகிழ்ந்தார். ரேவதியை பூவாக மணம் வீச வைத்த நேசகரத்தின் செயல் புகழுக்குரியது!



# "நேசக்கரம் தந்த உதவிக்கரம்"

## (வெள்ள நிவாரணப் பணி)

பண்டை காலத்து மனிதன் இயற்கையோடு இயைந்து வாழ்வு வாழ்ந்து வந்தான். இயற்கைக்கு புறம்பாக வாழும் இன்றைய நவீன மனிதன் வாழும் வாழ்வின் விளைவு தான் இயற்கையின் கோர சீற்றம். இது உலகின் பல்வேறு பாகங்களில் நிகழ்ந்த வண்ணமாய் இருக்கின்றது. இது தமிழ்நாட்டையும் தனக்கு இரையாக்க விட்டுவைக்கவில்லை. தமிழ்நாட்டில் பல்வேறு மாவட்டங்களில் தொடர் மழையால் பெருத்த உயிர் சேதமும், பொருட்சேதமும் பேரழிவும் மக்கள் சந்திக்க நேர்ந்தது.

சிங்காரச் சென்னை வரலாறு காணாத அளவுக்கு பெய்த கன மழையால் சின்னா பின்னமாக தத்தளித்த அவல நிலையை நம்மால் என்றும் மறந்து விட முடியாது. இவ்வியற்கை சீற்றத்தால் சொல்லொண்ணா துயரத்தில் நம் மக்கள் மூழ்கினர். நேசக்கரம் பணி புரியும் மையங்களான நந்தம்பாக்கம், ஆற்றுமா நகர், சைதை K.K. நகர், கால்வாங்கரை, சத்தியா நகர், L.G. சாலை, அய்யாசாமி சாலை, அம்பேத்கர் காலணி, புதிய குடிசை, CNK சாலை மற்றும் எல்லீஸ் சாலை போன்ற மையங்கள் வெள்ளத்திற்கு இரையாகின, அரசு நிவாரணம் கிடைத்த போதிலும், அம்மக்கள் தங்கள் இயல்பு நிலைக்கு திரும்ப முடியாது தவித்து கொண்டிருந்தனர்.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் தான் நேசக்கரம் தனது உதவிக்கரத்தை நீட்டியது. நேசக்கரம் "காலத்தால் செய்த உதவி" பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்தது. அவர்கள் தங்கள் வேலைக்குச் செல்ல வழியொன்றை வகுத்தது.

நேசக்கரம் இம்மையங்களில் உள்ள மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் மற்றும் குழந்தைகளுக்கு தேவையான உணவு, மளிகை பொருள்கள், அரிசி, பருப்பு, எண்ணெய், பால் பவுடர் மற்றும் சமையல் பாத்திரங்கள் வழங்கியது. செய்த இவ்வுதவி சிறிதெனினும், காலத்தால் செய்ததால், ஈடுசெய்ய முடியாத ஓர் உதவியாய் இருந்தது. இதைத்தான் பொய்யாப் புலவன் பின் வரும் குறலில் கூறுகிறான்.

"காலத்தால் செய்த உதவி சிறிதெனினும்
ஞாலத்தின் மானப் பெரிது."

★ தையல் பயிற்சி மையத்தில் 13 மகளிர்களுக்கு பயிற்சி கொடுக்கப் பட்டது. பயிற்சி முடித்த பின்னர் கூட்டாக சேர்ந்து உள்ளாடை, பிளவுஸ்கள் போன்றவை தயாரித்து விற்பனை செய்து வருகின்றார்கள்.

## நிவாரண பொருட்கள் வழங்கிய விபரம்

| வ.எ. | நாள் | இடம் (மையம்) | பொருட்களின் விபரம் |
|---|---|---|---|
| 1. | 27.10.05 | காட்டுப்பள்ளிக்குப்பம் (இருளர்) பொருட்கள், எண்ணெய், பருப்பு, புதிய குடிசை கொடுக்கப்பட்டது. | உணவுக்கு தேவையான மளிகை 250 உணவு பொட்டலம் |
| 2. | 28.10.05 | சைதை K.K. நகர் C.N.K. Road எல்லீஸ் சாலை | அரிசி மற்றும் மளிகை பொருட்கள், |
| 3. | 31.10.05 | L.G.Road, அய்யாசாமி சாலை வேனல்ஸ் சாலை | அரிசி மற்றும் மளிகை பொருட்கள் |
| 4. | 9.11.05 | அம்பேத்கார் காலனி, சைதை K.K. நகர் நந்தம்பாக்கம், புதிய குடிசை | அரிசி மற்றும் மளிகை பொருட்கள் |
| 5. | 10.11.05 | L.G. Road, ஆற்றுநகர் | " |
| 6. | 23.11.05 | ஆற்றுநகர், சின்னமலை, சத்தியாநகர் | " |
| 7. | 8.12.05 | புதிய குடிசை | " |
| 8. | 9.12.05 | கால்வாங்கரை, சைதை K.K. நகர், சத்தியாநகர் | " |

# மலரும் குழந்தைகளாட்சி

## (குழந்தைகள் பாராளுமன்றம் பயிற்சி)



ஒவ்வொரு நாளும் செய்தி தாள்களைப் புரட்டி பார்க்கையில் கண்களை கவருவது நம் நாட்டு வளர்ச்சி திட்டங்களும், முன்னேற்றங்களுமல்ல மாறாக நம் கவனத்தை ஈர்ப்பது தன்னலமிக்க அரசியல் வாதிகளின் ஊழல்களும், சுரண்டல்களும்தான். இதையெல்லாம் கண்டும் காணாதோர் போல் பலரிருக்க, நேசக்கரம் தன் பணி தளங்களில் உள்ள இலக்கு குழந்தைகளுக்கு விழிப்புணர்வும் தன்னம்பிக்கையும் ஊட்டும் வகையில், ''குழந்தைகள் பாராளுமன்றம்'' அமைத்து குழந்தைகளாட்சி தத்தம் பகுதிகளில் உருவாகிட வழி செய்துவருகிறது.

இப்பயிற்சியின் மூலமாக குழந்தைகள் தங்கள் அறிவை வளர்க்கிறார்கள், படைப்பாற்றல்களை வளர்க்கிறார்கள், பேச்சு திறனை வளர்க்கிறார்கள், தம் பொறுப்புகளை தெரிந்து கொள்கிறார்கள் மற்றும் தம்மில் புதைந்து கிடைக்கும் திறமைகளை அடையாளம் கண்டு கொள்கிறார்கள். முடிவில் குழந்தைகளாட்சி செவ்வனே மலர தம் பணிகளை கற்றுக்கொள்கிறார்கள்.

ஒவ்வொருவரும் தங்கள் அதிகாரத்தை முழுமையாக தாங்களே தீர்மானித்து அதை தங்களின் பங்கேற்பின் மூலம் பயன்படுத்துவதால் மட்டுமே இன்றைய அனைத்து சமூக தீமைகளையும், சீர்கேடுகளையும், உரிமை மீறல்களையும் தடுத்து, சவால்களை சாதனைகளாக்க முடியும். இவைகளை உறுதி செய்யும் பொருட்டு, சவால்களை சாதனைகளாக மாற்றிட குழந்தைகள் அவர்கள்.. வசிக்கும் பகுதி வாரியாக ஒருங்கிணைக்கப் பட்டனர்.

6 வயது முதல் 18 வயது வரை உள்ள குழந்தைகள் இதில் அடங்குவர். இந்த பாராளுமன்ற குழுவானது அவர்கள் வசிக்கும் இடங்களில் தேவையான அடிப்படை வசதிகளை பெறச் செய்வதும், இக்குழுக்களே முழுமையான ஈடுபாட்டுடன் செயல்படுவது குறித்தும், தங்களில் மறைந்து கிடைக்கும் திறமைகளை தோண்டி எடுக்கும் தளமாக அமைவது குறித்தும் செயல்பட்டு வருகிறது. இந்திய பாராளுமன்றத்தில் என்னென்ன நடைமுறைகள், பின்பற்ற படுகிறதோ, அதே போன்று இங்கும் செயல்படுத்தபடுகிறது. ஒவ்வொரு குழுவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதமர், உள்துறை அமைச்சர் உள்ளிட்ட 10 அமைச்சர்கள் தாஜ் கோரமண்டல் ஹோட்டலில் நடைபெற்ற சிறப்பு பயிற்சியில் பங்குபெற்று பயனடைந்தனர்.

கடந்த மார்ச் 2005 முதல் டிசம்பர் 2005 வரை நடைபெற்ற குழந்தைகள் பாராளுமன்ற பயிற்சிகளால், பாராளுமன்றத்தின் நோக்கம், அமைச்சர்களின் பொறுப்புகள், தகவல் பரிமாற்றம் மற்றும் விண்ணப்ப மனு எழுதுவதும் ஆவன காப்பகம் குறித்தும் குழந்தைகள் அறிவூட்டம் பெற்றனர். இப்பயிற்சிக்கான இடம், உணவு, சிற்றுண்டி வழங்கிய தாஜ் கோரமண்டல நிறுவனத்தின் சேவை மனப்பான்மை போற்றுதற்குரியது. இப்பயிற்சியின் மூலம் பயன்பெற்ற குழந்தைகள் மொத்தம் 107 ஆவர்.

குழந்தைகளாய் மண்ணிலே மலர்ந்து குழந்தைகளாட்சியை இம்மண்ணிலே படைக்க தூண்டும் துடிப்புதான் குழந்தைகள் பாராளுமன்ற பயிற்சி!

# "தாஜ் ஹோட்டலில் நவம்பர் – 14"




சாலைவாழ் மற்றும் உழைக்கும் சிறார்களின் நலன் கருதி தம்மையே முழுமையாக அர்ப்பணித்து பணி செய்து வரும் நேசக்கரத்திற்கு, தாஜ் நிறுவனமும் பல்வேறு வகைகளில் ஊக்குவிப்பும், உதவியும் செய்து வருகிறது. இவற்றில் ஒன்றுதான் தாஜ் ஹோட்டலில் நவம்பர் – 14.

நவம்பர் – 14 என்றால் நம் அனைவரின் ஞாபகத்தை வருடுவது குழந்தைகள் தின விழாதான். ஆம்! 2005ம் ஆண்டின் குழந்தைகள் தினத்தை தாஜ் ஹோட்டல் நிறுவனம், நேசக்கர குழந்தைகளுடன் கொண்டாட தமக்கே உகந்த சேவை மனப்பான்மையுடன் முன் வந்தது. இவ்விழாவின் முக்கிய அம்சமாக, குழந்தைகளின் திறமைகளை வெளிக் கொண்டும் நிகழ்ச்சி இடம் பெற்றிருந்தது பாராட்டுக் குரியது. ஓவியப் போட்டி, களிமண் பொம்மை படைத்தல், பாட்டுப் போட்டி,

பேச்சுப் போட்டி மற்றும் குழு நடன நிகழ்ச்சிகள் என கண்ணை கவரும் கலை நிகழ்வுகளாக இருந்தன.

இந்நன்நாளில், திருமிகு ஜோசப் கிரஹாம், பகுதி மனிதவள மேலாளர் (தாஜ் கோரமண்டல்) மற்றும் ஹோட்டல் நிறுவன பணியாளர்கள், மற்றும் நேசக்கர இயக்குநர் தந்தை ஜேசு. பி. ச. கலந்து கொண்டு இவ்விழாவினை சிறப்பித்தனர்

19.11.05 அன்று நடைபெற்ற இவ்விழாவில் 100 குழந்தைகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இவ்விழாவினை மிகுந்த சிறந்த முறையில் தாஜ் கோரமண்டல் நிறுவனம் முன்னின்று நடத்தியது. அன்றைய நாள் குழந்தைகளுக்கு ஓர் மறவா நாளாக தங்கள் மனதில் நீங்கா இடம்பெற்ற நன் நாள். போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்கள் பல பரிசுகளை தட்டிச் சென்றனர்.

தாஜ் ஹோட்டலில் நவம்பர் - 14, நேசக்கரத்தின் தாழில்லா அன்பிற்கும், தாஜ் கோரமண்டல் குழுமத்தின் தன்னலமற்ற சேவைக்கும் ஒரு உதாரணம்.

## நிகழ்ந்தவைகள்

9.10.05 - அரும்பரங்கம் பயிற்சி - சைதை பகுதி சிறார்கள் - குழந்தைகள் பாராளுமன்ற அமைச்சர்கள் சுற்றுலா - சிந்தை பகுதி

14.10.05 - எத்திராஜ் கல்லூரியில் நடைபெற்ற விழிப்புணர்வு நிகழ்வில் நேசக்கரம் செயல்பாடுகள் மற்றும் வீதிநாடகம்

16.10.05 - புதிய மைய குழ்ந்தைகளுக்கு அரும்பரங்க பயிற்சி.

21.10.05 - மகளிர் சுய உதவி குழு அன்ன பூர்ண பல்பொருள் அங்காடி - திறப்பு விழா

23.10.05 - அரும்பரங்க பயிற்சி - சிந்தை பகுதி சிறார்கள்

26.10.05 - தையல் பயிற்சி நிறைவு

27.10.05 - மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட, வேனல்ஸ் சாலை, காட்டுபள்ளிகுப்பம் மக்களுக்கு உணவு பொட்டலங்கள் வழங்கப்பட்டது.

28.10.05 - வெள்ள நிவாரணம் - புதிய குடிசை மக்களுக்கு உணவு வழங்கப்பட்டது

29.10.05 - வெள்ள நிவாரணமாக சைதை, ஆற்றுநகர், K.K. நகர், புதிய குடிசை, இராயபேட்டை பகுதியான எல்லீஸ்ரோடு, C.N.K. ரோடு, ஆகிய இடங்களுக்கு உணவு பொருட்கள் வழங்கப்பட்டது

30.10.05 - வெள்ள நிவாரணமாக உணவு பொருட்களை சிந்தை பகுதியில் இருக்கும் L.G. சாலை, அய்யாசாமிசாலை, பம்பிங்ஸ்டேசன், வேனல்ஸ்சாலை ஆகிய இடங்களுக்கு வழங்கப்பட்டது.

9.11.05 - வெள்ள நிவாரணமாக உணவு பொருட்கள் புதிய குடிசை, நந்தம்பாக்கம், சைதை K.K. நகர் மக்களுக்கு வழங்கப்பட்டது.

10.11.05 - வெள்ள நிவாரணமாக உணவு பொருட்களை L.G. சாலை, ஆற்றுநகர் மையங்களுக்கு வழங்கப்பட்டது.

19.11.05 - குழந்தைகள் தினவிழா

23.11.05 - வெள்ள நிவாரணமாக ஆற்றுநகர் மக்களுக்கு வழங்கப்பட்டது.

28-1.12.05 - Capacity Building Training Tsunami Victims - குறித்த பயிற்சியில் எமது பணியாளர்கள் கலந்துகொண்டது.

7.12.05 - வெள்ள நிவாரணமாக ஆற்றுநகர் மக்களுக்கு உணவு பொருட்கள் வழங்கப்பட்டது.

9.12.05 - வெள்ள நிவாரணமாக கால்வாங்கரை, சைதை K.K. நகர் ஆற்றுநகர், சத்தியாநகர் மக்களுக்கு உணவு பொருட்கள் வழங்கப்பட்டது.

22.12.05 - NTTRRC நடத்திய தர்னா நிகழ்வில் எமது நிறுவன சார்பாக மக்கள் பணியாளர்கள் கலந்து கொண்டது.

வெளியிடுபவர்: **இயக்குநர், நேசக்கரம் - சீட்ஸ்**
**11, முதல் குறுக்கு தெரு,**
**லேக் ஏரியா, நுங்கம்பாக்கம்,**
**சென்னை - 600 034.**
**போன்: 044-28172330, 28174770.**

பெறுநர்

(தனிச்சுற்றுக்கு மட்டும்)